**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 512** **நாள்: 26.09.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள நகர்ப்புற வீடற்றோருக்கான தங்குமிட வசதிகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி கோயம்பேடு பேருந்து நிலையத்தில் நடத்தப்பட்டது.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சமூக மேம்பாட்டுப் பிரிவின் கீழ் நகர்ப்புற வீடற்றோருக்காக வழங்கப்படும் தங்குமிட வசதிகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 25.09.2026 அன்று கோயம்பேடு பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், நகர்ப்புற வீடற்றோர் காப்பகங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கையெழுத்து இயக்கம், ஒயிலாட்டம், பறையாட்டம் மற்றும் தெருக்கூத்து போன்ற பாரம்பரிய மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இவற்றின் மூலம், வீடற்றவர்கள் சாலையோரங்களிலோ அல்லது பாதுகாப்பற்ற சூழலிலோ தங்குவதைத் தவிர்த்து, மாநகராட்சி மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் (NGOs) நடத்தப்படும் காப்பகங்களைப் பயன்படுத்திக்கொள்வதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தொடர்ந்து, பொதுமக்களும் அதிகாரிகளும் இணைந்து உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்; மேலும், காப்பக வசதிகள் மற்றும் சேவைகள் குறித்த தகவல்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

முன்பு இக்காப்பகங்களில் தங்கியிருந்த பயனாளிகளும் தங்கள் அனுபவங்களைப் பொதுமக்களுடன் பகிர்ந்துகொண்டனர். அங்கு தங்கியிருந்தபோது தங்களுக்குக் கிடைத்த பாதுகாப்பு, உணவு, தங்குமிடம் மற்றும் தேவையான உதவிகள் குறித்தும், காப்பக சேவைகள் மூலம் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட நன்மைகள் மற்றும் நேர்மறையான மாற்றங்கள் குறித்தும் அவர்கள் விளக்கிக் கூறினர். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 600-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள நகர்ப்புற வீடற்றோர் காப்பகங்களை வீடற்றோர் பயன்படுத்திக் கொள்ளவும், உதவி தேவைப்படும் நேரங்களில் மீட்பு மற்றும் தங்குமிட குழுக்களை அணுகவும் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், சாலையோரங்களில் வசிக்கும் வீடற்றோர் மற்றும் பொதுமக்களிடையே பெருநகர சென்னை மாநகராட்சியின் தங்குமிட வசதிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், தேவையுள்ள வீடற்றோர் இவ்வசதிகளை பயன்படுத்திக் கொள்ள ஊக்குவிப்பதும் ஆகும்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள தங்குமிடங்களில் தினமும் மூன்று வேளை உணவு, பாதுகாப்பான தங்குமிடம், சுகாதாரம் மற்றும் தூய்மை வசதிகள், மருத்துவ உதவி,

மறுவாழ்வு, குடும்பத்துடன் மீள் இணைப்பு மற்றும் வாழ்வாதார/வேலைவாய்ப்பு வாய்ப்புகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்தச் சேவைகள் சம்பந்தப்பட்ட அரசு துறைகளுடன் ஒருங்கிணைந்து மாநகராட்சியின் சமூக மேம்பாட்டுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் சமூக மேம்பாட்டு அலுவலர் திரு. ராஜ்குமார், சமூக மேம்பாட்டு அலுவலர்கள், கோயம்பேடு காவல் துறை அலுவலர்கள் மற்றும் காப்பக ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**